**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A.No. 2/2022 In O.S.No. 255/2019**

ஜெகநாதன் (இறப்பு) .... வாதி

P.P.1. மல்லிகா

P.P.2. சிவக்குமார்

P.P.3. சதீஸ்குமார் ..... மனுதாரர்கள்/ proposed parties (PP1 to PP3)

**/எதிர்/**

கார்த்திகேயன் ......எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 20.12.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/புரபோஸ்ட் நபர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.S. இம்ரான்கான் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

இறந்து போன வாதி ஜகநாதனுக்கு உரிய காலத்தில் வாரிசுகள் சேர்க்க மனுபோடாத காரணத்தால் ஏற்பட்ட 86 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென பரிகாரம் கோரி காலவரையரைச்சட்டம் பிரிவு 5 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

### மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் மேற்படி மனுவின் 3 ம் மனுதாரர் மற்றும் 3 ம் புரபோஸ்ட் நபர். தாவா வழக்கானது செயலுறுத்துக்கட்டளை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி

வழக்கு நிலுவையில் இருந்த போது வாதி ஜெகநாதன் கடந்த 08.04.2021ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன வாதி ஜெகநாதனின் வாரிசுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க தனி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் 1ம் புரபோஸ்ட் நபர் ஜெகநாதனின் மனைவி, 2 மற்றும் 3 புரபோஸ்ட் நபர்கள் மகன்கள். எனவே இறந்துபோன வாதி ஜெகநாதனின் வாரிசு என்ற அடிப்படையில் அசல் வழக்கில் 2 முதல் 4 வாதிகளாக சேர்க்கவேண்டுமென்றும், மேற்படி ஜகநாதன் இறந்த தேதியில் இருந்து 90 நாட்களுக்குள் வாரிசு மனு தாக்கல் செய்ய வேண்டும். வாதி ஜகநாதன் இறந்த துக்கம் மற்றும் மன வலி, துன்பங்கள் காரணமாக வழக்கறிஞரை சந்தித்து உரிய காலத்தில் வாரிசு சேர்க்க மனு போட இயலாமல் போய்விட்டது. எனவே மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 86 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்

2. மனுதாரர் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. வாதி ஜகநாதன் என்பவர் 08.04.2021ம் தேதி இறந்ததாக கூறுவதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் வாதி இறந்த சோகத்தின் காரணமாக வழக்கறிஞரை சந்தித்து வாரிசு சேர்க்க உரியகாலத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறுவது சரியல்ல. வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மேற்படி மனுதாரர்களின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள போது வாதி ஜகநாதன் 08.04.2021ம் தேதி இறந்துவிட்டார். வாதி

ஜகநாதன் இறந்த துக்கம் மற்றும் மன வலி, துன்பங்கள் காரணமாக வழக்கறிஞரை சந்தித்து உரிய காலத்தில் மனுதாரர்களால் வாரிசு சேர்க்க மனு போட இயலாமல் போய்விட்டது என்று மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் உரிய காலத்தில் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. பொதுவாக ஒரு வழக்கில் இரு தரப்பிற்கும் உரிய வாய்ப்பு கொடுத்து தீர்ப்பு பகரப்பட்டால் மட்டுமே அந்த வழக்கானது உண்மையான இறுதி நிலையை எட்டும். மேலும் வாதி ஜகநாதன் இறந்த துக்கம் மற்றும் மன வலி காரணமாக வழக்கறிஞரை சந்தித்து உரிய காலத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை. 86 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது என மனுதாரர் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது. மேற்படி மனுவை அனுமதிப்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பினை வழங்கும் விதமாகவும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 02 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- P. பாலமுருகன்

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

| | | |
|---|---|---|
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

Sd/- P. பாலமுருகன்

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**